# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**CC NO. 554/2025**

**Date : 23.03.2026** **PW 5 / LW6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதா வெங்கடேஷ் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | ராமலிங்கம் | தொழில் | தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி - மேல் படிப்பு |
| கிராமம் | கள்ளக்குறிச்சி | வயது | 38 |
| எதிரி 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரியில் மேல் படிப்பு படித்து வருகிறேன். நான் கடந்த 17.04.2023 அன்று நான் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது விருதாம்பாள், வயது 40, க/பெ. ஆறுமுகம், தெற்கு தெரு, பெரும்பட்டு கிராமம் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் இரவு 08.20 மணியளவில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்து சேர்ந்தார். அவர் தன்னை 2 தெரிந்த நபர்கள் அன்றைய தினம் மாலை 04.00 மணியளவில் அவரது வீட்டின் அருகில் வைத்து குச்சி, கை மற்றும் காலால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது **அவருக்கு வெளிக்காயங்கள் ஏதும் இல்லை. வலது இடப்பு பகுதியில் வலி இருப்பதாக கூறினார்.** உடனே உள் நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என சான்றளித்தேன். அந்த **காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

சம்பவ நாளன்று உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் நான் என்ன மருத்துவராக பணியில் இருந்தேன் என்றால் உதவி மருத்துவராக பணியில் இருந்தேன். நான் மருத்துவத் துறையில் எந்த துறையில் சிறப்பு நிபுணராக இருந்தேன் என்றால் ENT

துறையில் சிறப்பு நிபுணராக இருந்தேன். அ.சா.1 விருதாம்பாளுக்கு ஏற்பட்ட காயங்களானது அவர் கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. அ.சா.1 விருதாம்பாளுக்கு இடுப்பில் வலி இருந்ததாக கூறியது அவரது உடல் பாவனையாக கூட இருக்கலாமா என்றால் இருக்கலாம்.

**மறுவிசாரணை- இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.